# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## பதினாறாவது ஆண்டறிக்கை.

**29-6-57 தொடக்கம் 12-8-58 வரை**

12—8—58இல் சைவமங்கையர் கழக மண்டபத்தில் நடைபெறும் பதினாறாவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சங்க உறுப்பினர்களுக்கு ஆட்சிக் குழுச் சமர்ப்பிக்கும்

## அறிக்கையும் கணக்கு விபரமும்.

### உறுப்பினர்

| | | |
|---|---|---|
| ஆயுள் உறுப்பினர் | — | 88 |
| சாதாரண உறுப்பினர் | — | 323 |
| | மொத்தம் | 411 |

1-7-57 தொடக்கம் 1-8-58 வரை 66 புதிய உறுப்பினர் சேர்க்கப்பட்டனர். பேராசிரியர் செயரத்தினம் எலியேசர் அவர்களும் திருவாளர் எம். எஸ். இராமையாபிள்ளை அவர்களும் ஆயுள் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டனர்.

### ஆட்சிக்குழுக் கூட்டம்

ஏழு ஆட்சிக்குழுக் கூட்டங்கள் சங்க அலுவலகத்தில் நடைபெற்றன.

## விழாக்கள் முதலியன

(அ) 8–7–57இல் சங்கத் தலைவர் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் தலைமையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் "இலக்கிய இன்பம்" எனும் பொருள் பற்றிச் சொற்பெருக்காற்றினர்.

(ஆ) 24–8–57இல் வில்லிசை வேந்தன் எஸ். பி. பிச்சைக் குட்டி அவர்கள் வில்லிசைக் கச்சேரி நடத்தினர்.

(இ) 21–9–57இல் நூல் நிலையத் திறப்புவிழாவும் மறைமலை அடிகளார் நினைவு விழாவும் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்றன. சங்கக் காப்பாளர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் நூல் நிலையத்தைத் திறந்து வைத்தார்கள். ஆசிரியர் திரு. கு. வி. செல்வத்துரை அவர்களும், திரு. எசு. எம். கமால்தீன் அவர்களும் சொற்பொழிவாற்றினர்.

(ஈ) 6–10–57இல் எங்கள் சங்கத்தினதும் கொழும்பு விவேகானந்த சபை, அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் என்பவற்றினதும் ஆதரவில் தமிழ் நாட்டு எழுத்தாளர்களான திருவாளர்கள்: எஸ். கே. இராமன் (மாயாவி), கே. ஆர். கல்யாணராமன் (மகரம்), ஆர். பாலக்கிருட்டினன், ஆர். சிறீனிவாசன் (ரசவாதி), சீ. ஆர். பழனிஆண்டி (அன்புப் பழம் நீ) என்போர் சொற்பொழிவாற்றினர். இக் கூட்டம் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் "வீரகேசரி" ஆசிரியர் திரு. கே. பி. அரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

(உ) 13–12–57இல் சங்கத் தலைவர் தலைமையில் வித்துவான் திரு. சோ. சிங்காரவேலனர் அவர்கள் (தமிழ்ப் பேராசிரியர் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்,) "சங்கத் தமிழ்" எனும் பொருள் பற்றியும், பண்டிதர் திரு. நா. பார்த்தசாரதி அவர்கள் (செயலாளர், தமிழ்



எழுத்தாளர் சங்கம், மதுரை) "கொங்குவேள் மாக்கதை" எனும் பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

(ஊ) 4–1–58இல் வெள்ளத்தாற் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டிய உதவி செய்தல் பற்றி ஆராய்தற்கு ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது.

சங்கத் தலைவர் தலைமையில் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்களும், கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா அவர்களும், திரு. எஸ். ஏச். முகமெட் அவர்களும், திரு. எஸ். தொண்டைமான் அவர்களும், திரு. பீற்றர் கெனமென் அவர்களும் பேசினர்கள்.

## பத்துப்பாட்டு மாநாடு

8, 9–3–58ஆம் நாள்களில் மேற்படி மாநாடு நடத்தப்பட்டது. மாநாட்டைச் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தொடக்கி வைத்தார்கள். முதல் நாள் சங்கத் தலைவர் தலைமையில், பத்துப் பாட்டுக்களில் முதல் ஐந்தையும்பற்றி முறையே, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, திருவாளர்கள் கு. பூரணானந்தா, கு. வி. செல்வத்துரை, செ. வேலாயுதபிள்ளை, திருவாட்டி மகேசுவரி மகாதேவா என்போர் சொற்பொழிவாற்றினர்.

இரண்டாம் நாள் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் தலைமையில் கடைசி ஐந்து பாட்டுக்களையும்பற்றி முறையே ஆசிரியர் நீ. மே. யோ. வேதநாயகம், பண்டிதர் திரு. க. மயில்வாகனம், பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம், திருவாட்டி புவனேசுவரி சச்சிதானந்தம், வித்துவான் திரு. சி. சகநாதன் என்போர் சொற்பொழிவாற்றினர்.

## ஆராய்ச்சியுரைகள்

13—10—57 தொடக்கம் ஞாயிற்றுக்கிழமைதோறும் நான்கு மாதங்கள் வரை நடைபெற்றன.

திரு. கி. இலக்குமண ஐயர் அவர்கள் "புறநானூறு" என்பதுபற்றியும், பண்டிதர் திரு. சி. சேதுகாவலர் அவர்கள் "கலித்தொகை" என்பதுபற்றியும், பண்டிதர் திரு. சு. அருளம்பலம் அவர்கள் "பதிற்றுப்பத்து" என்பதுபற்றியும் உரை நிகழ்த்தினர்.

## ஆண்டு விழா

மே மாதக் கடைசியில் நடத்த ஒழுங்கு செய்யப்பட்ட ஆண்டு விழா அண்மையில் ஏற்பட்ட நெருக்கடியாற் கைவிடப்பட்டது.

## ஆண்டு மலர்

இவ்வாண்டிலே பேரறிஞர் பலருடைய இலக்கியப் படைப்புக்களைக் கொண்ட ஆண்டு மலர் ஒன்றினை வெளியிட எண்ணி விளம்பரங்களைச் சேர்த்து அச்சிட முயன்றபொழுது நெருக்கடி ஏற்பட்டமையால் அதனை அடுத்த ஆண்டில் வெளியிடுவதென முடிவு செய்துளோம்.

## கொழும்புப் பொது நூல் நிலையம்

கொழும்புப் பொது நூல் நிலைய ஆணைக்குழுவுக்குச் சங்கத்தின் சார்பிற் கருத்துரை வழங்குதற்குப் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் (தலைவர்), திருவாளர்கள் வே. கணபதிப்பிள்ளை, மு. கணபதிப்பிள்ளை, வ. யேசுரத்தினம், மு. வயிரவப்பிள்ளை, க. வயிரமுத்து (பொதுச் செயலாளர்) என்போரைக் கொண்டதொரு துணைக்குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவினர் 11—4—58இல் சங்கச்சார்பில் நேர்முகமாகக் கருத்துக்களைச் சமர்ப்பித்தனர்.

## பல்கலைக் கழக ஆணைக்குழு

பல்கலைக் கழக ஆணைக் குழுவுக்கும் கருத்துரை வழங்குதற்குப் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் (தலைவர்), திருவாளர்கள் வ. அருளம்பலம், வே. கணபதிப்பிள்ளை, வ. குலநாயகம், மு. வயிரவப்பிள்ளை, க. வயிரமுத்து (பொதுச் செயலாளர்) என்போரைக்கொண்டதொரு துணைக்குழு நியமிக்கப்பட்டது. இவர்களின் கருத்துரைகள் 19—4—58இல் பல்கலைக் கழக ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டன.



## சங்கநூல் நிலையம்

சென்ற செப்ரம்பர் மாதத்தில் சங்க அலுவலகத்தில் நூல் நிலையம் அமைக்கப்பட்டது. அன்பர்கள் பலர் நூல்களை உதவியும் நன்கொடை அளித்தும் ஆதரவளித்துளர் உறுப்பினர் பலர் நூல் நிலையத்தைப் பயன்படுத்துகின்றனர்.

## நன்றி

சங்கத்தின் ஆக்கத்துக்கு உதவி அளித்துவரும் பத்திரிகைகளுக்கும், வெள்ளவத்தைச் சைவமங்கையர் கழகத்தாருக்கும், நூல் நிலையத்துக்குப் பணம், நூல் முதலியன நல்கிய பெருமக்களுக்கும், ஆண்டு மலருக்குக் கட்டுரை, கதை முதலியன அனுப்பிய பேரறிஞர்களுக்கும் சங்கத்தின் நன்றி உரித்தாகுக.

வாழ்க தமிழ்ச் சங்கம்! வாழ்க தமிழ் பேசும் இனம்!!

வாழ்க தமிழ்த்தாய் !!!

**க. வயிரமுத்து,**
பொதுச் செயலாளர்.

57ஆம் ஒழுங்கை,
கொழும்பு-6,
ஆடி 28, தி. ஆ. 1989.

———

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## 1—1—1957 தொடக்கம் 31—12—57 வரை உள்ள வரவு செலவுக் கணக்கு.

| வரவு | ரூ. | ச. | செலவு | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| சாதாரண சந்தா | 1075 | 50 | சைவ மங்கையர் கழக மண்டப வாடகை | 100 | 00 |
| | | | பகிரங்கக் கூட்டங்களும் விழாக்களும் | 1413 | 42 |
| சீவிய சந்தாவும் நன்கொடையும் | 1728 | 50 | முத்திரை, எழுத்து உபகரணம் | 143 | 91 |
| | | | அச்சடித்தல் | 685 | 50 |
| வீட்டு வாடகை | 263 | 90 | சேகரிப்பாளருக்குரிய கழிவு | 322 | 63 |
| | | | வரி விதிப்பு வீதம் | 135 | 98 |
| வங்கி வட்டி | 183 | 00 | கணக்குப் பரிசோதகர் கட்டணம் | 50 | 00 |
| | | | வங்கிக் கட்டண விதி | 5 | 52 |
| | | | நானுவிதச் செலவுகள் | 12 | 00 |
| | | | கட்டடம் பழுது பார்த்தல் | 348 | 00 |
| | | | வெளிச்சம் | 31 | 73 |
| | | | மேலதிகமாயுள்ளது (செலவு நீக்கி மிகுதி) | 2 | 21 |
| மொத்தம் | 3250 | 90 | மொத்தம் | 3250 | 90 |

பெ. கணபதிப்பிள்ளை,
பொருளாளர்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## 31—12—57ல் உள்ள ஐந்தொகை.

| செல் பொருள் | ரூ. | ச. | ரூ. | ச. | உரிமைப் பொருள் | ரூ. | ச. | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதல் :— | | | | | ஆதனக் கணக்கு :— | | | | |
| 1-1-57ல் உள்ள மிகுதி | 31,307 | 60 | | | (முந்திய கணக்குத் திரட்டுப்படி) | 21,785 | 00 | | |
| | | | | | மின்சார வசதி செய்த வகையில் | 390 | 00 | 22,175 | 00 |
| இவ்வாண்டில் செலவு நீக்கி மிகுதி | 2 | 21 | 31,309 | 81 | தளபாடங்களும் நிலையாக நாட்டப்பட்ட சாதனங்களும் :— (முந்திய கணக்குத் திரட்டுப்படி) | | | 392 | 60 |
| | | | | | புத்தகங்கள் :— (முந்திய கணக்குத் திரட்டுப்படி) | | | 250 | 00 |
| | | | | | பணம் :— | | | | |
| | | | | | கையிருப்பு | 198 | 08 | | |
| | | | | | இலங்கை வங்கியில் :— | | | | |
| | | | | | நடைமுறைக் கணக்கு | 810 | 84 | | |
| | | | | | சேமிப்புக் கணக்கு | 7,350 | 00 | | |
| | | | | | தபாற்கந்தோர் சேமவங்கியில் | 133 | 29 | 8,492 | 21 |
| | | | 31,309 | 81 | | | | 31,309 | 81 |

31-12-57 முடிய உள்ள ஐந்தொகைக் கணக்கை, அதனேடியைந்த கணக்குப் புத்தகங்களையும், பற்றுச் சீட்டுக்களையும், மற்றும் தேவையான தகவல்களையும் ஆதாரமாகப் பெற்றுப் பரிசோதனை செய்து, ஐந்தொகைக் கணக்கு உண்மையும் சரியுமென உறுதிப்படுத்துகிறேன்.
கொழும்பு, 5—6—1958.

ஞா. இராசதுரை,
பதிவு செய்யப்பட்ட கணக்காய்வாளர்.

பெ. கணபதிப்பிள்ளை
பொருளாளர்.

## கொழும்புத் தமிழ்ச்சங்க அலுவலாளர்கள்
### 29-6-1957 தொடக்கம் 12-8-1958 வரை.

**காப்பாளர் :**

சேர். கந்தையா வைத்தியநாதன்

**துணைக் காப்பாளர்கள் :**

| | |
|---|---|
| திரு. க. ச. அருள்நந்தி | திருமதி த. நடராசா |
| ,, அ. சபாரத்தினம் | திரு. செ. நடராசா |
| ,, யோன் செல்லப்பா | செனேற்றர் சு. நடேசன் |
| ,, இ. பொ. செல்லையா | டக்டர் த. நல்லைநாதன் |
| வணக். எக்ச். எசு. தனிநாயக அடிகள் | திரு. ப. நவரத்தினராசா |

**தலைவர் :**

பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம்

**துணைத் தலைவர்கள் :**

| | |
|---|---|
| திரு. வ. அருளம்பலம் | திரு. வெ. சுப்பையா |
| ,, கோ. ஆழ்வாப்பிள்ளை | ,, சோ. நடராசா |
| ,, செ. இராசையா | ,, மு க. நடராசா |
| ,, கா. கார்த்திகேசர் | ,, வே. க. ப. நாதன் |
| ,, வ. குலநாயகம் | ,, மு. வயிரவப்பிள்ளை |

**பொதுச் செயலாளர் :**

திரு. க. வயிரமுத்து

**துணைப் பொதுச் செயலாளர் :**

திரு. வ. யேசுரத்தினம்

**உறுப்புரிமைச் செயலாளர் :**

திரு. சே. க. சண்முகம்பிள்ளை

**பொருளாளர் :**

திரு. பெ. கணபதிப்பிள்ளை

**துணைப் பொருளாளர் :**

திரு. வே. இராசமாணிக்கம்

**நிலைய அமைப்புச் செயலாளர் :**

திரு. வே. கனகசபாபதி

**நூல் நிலையப் பொறுப்பாளர் :**

திரு. மு. கணபதிப்பிள்ளை

**ஆட்சிக் குழு உறுப்பினர் :**

| | |
|---|---|
| திரு. கா. கா. இரத்தினம் | திரு. மு. சிவராசா |
| ,, அ. வ. இரத்தினராசா | ,, கு. வி. செல்வத்துரை |
| ,, ப. இராசரத்தினம் | ,, சி. சேனாதிராசா |
| ,, வே. கணபதிப்பிள்ளை | ,, இ. சி. சோதிநாதன் |
| ,, சு. சங்கரசிவம் | ,, வை. பாலகிருட்டினன் |
| ,, ஆ. சின்னத்தம்பி | ,, சி. பொன்னம்பலம் |
| ,, சி. த. சிவநாயகம் | ,, க. மதியாபரணம் |

திரு. சு. ரேசையா

**கணக்காய்வாளர்கள் :**

திரு. வ. செல்லையா — திரு. க. விசுவநாதன்

S. P. Ltd.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## பதினேழாவது ஆண்டறிக்கை.

### 13-8-1958 தொடக்கம் 25-7-59 வரை.

**உறுப்பினர்**

| | | |
|---|---|---|
| ஆயுள் உறுப்பினர் | ... | 88 |
| சாதாரண உறுப்பினர் | ... | 240 |
| மொத்தம் | | 328 |

13-8-58 தொடக்கம் 25-7-59 வரை 50 புதிய உறுப்பினர் சேர்க்கப்பட்டனர்.

**ஆட்சிக்குழுக் கூட்டம்**

பத்து ஆட்சிக்குழுக் கூட்டங்கள் சங்க அலுவலகத்தில் நடைபெற்றன.

**விழாக்கள் முதலியன**

(அ) 1-10-58இல் **தமிழிலக்கியவிலக்கண வகுப்புத் தொடக்க விழா** சங்கத் தலைவர் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்வகுப்பின் ஆசிரியர் திரு. சிவங் கருணைலய பாண்டியனார் அவர்கள் வகுப்பைத் தொடக்கி வைத்தார்கள். இருபதுக்கு மேற்பட்டோர் வகுப்பிற் சேர்ந்தனர்.

(ஆ) 19-1-59இல் சங்கத் தலைவர் தலைமையில் **'தமிழர் திருநாள் விழாக்'** கொண்டாடப்பட்டது. திரு. அ. வி. மயில்வாகனன் அவர்கள் சொற்பொழி வாற்றினார்கள். இந்திய செய்திச் சேவையினரால் திரைப்படக்காட்சி ஒன்றுங் காண்பிக்கப்பட்டது.

(இ) 16-2-59இல் **'சங்கத் தமிழ்'** எனும் பொருள் பற்றிப் பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் ஒரு விரிவுரை நிகழ்த்தினார்கள் சங்கத் தலைவர் தலைமை தாங்கினார்கள்.

(ஈ) 22-3-59 இல் சங்கத் தலைவர் தலைமையில் **'கம்பர் விழாக்'** கொண்டாடப்பட்டது. திரு. சி. சிவகுருநாதன், செல்வி ப. கந்தையா, திரு. கி. இலக்குமணன் என்போர் சொற்பொழிவாற்றினர்.

(உ) 14-4-59 இல் சங்கத் தலைவரின் தலைமையில் **தமிழிசை வகுப்புத் தொடக்க விழா நடைபெற்றது.** தமிழிசை வகுப்பின் ஆசிரியர் திரு. நா. ப. பாலசந்திரன் அவர்கள் வகுப்பைத் தொடக்கி வைத்தார்கள்.

(ஊ) 25-4-59 இல் சங்கத் தலைவர் தலைமையில் **'சிலப்பதிகார விழா'** நடைபெற்றது. திரு. கா. சிவத்தம்பி அவர்கள் 'சிலப்பதிகார காலத் தமிழகம்' என்பது பற்றியும், வித்துவான் சி. சகந்நாதன் அவர்கள் 'சிலம்பு கண்ட உண்மை' என்பது பற்றியுஞ் சொற்பொழிவாற்றினர்கள். சங்கப் பட்டிமன்ற ஆதரவில் சிலப்பதிகாரத்தில் கண்ணகியும் மாதவியும் என்பது பற்றி ஒரு கலந்துரையாடலும் இடம்பெற்றது.

(எ) 22-5-59 இல் எமது சங்கத்தினதும் சைவமங்கையர் கழகம், கொழும்பு விவேகானந்த சபை, வெள்ளவத்தை இசைக்கலை மன்றம் என்பவற்றினதும் ஆதரவில் **'திருவள்ளுவர் திருநாள்' கொண்டாடப்பட்டது.** திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையில் வித்துவான் திரு. இ. சி. சோதிநாதன், வித்துவான் திரு. நீ. மே. யோ. வேதநாயகம், ஈழவேந்தன் என்போர் விரிவுரை நிகழ்த்தினர்கள்.

(ஏ) 13-7-59 இல் சங்கத் தலைவர் தலைமையில் **'குழந்தை இலக்கியம்'** என்னும் பொருள் பற்றிக் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் ஒரு விரிவுரை நிகழ்த்தினர்கள்.

## எட்டுத்தொகை மாநாடு

31-1-59, 1-2-59 ஆகிய நாள்களில் மேற்படி மாநாடு நடத்தப்பட்டது. மாநாட்டைத் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் தொடக்கி வைத்தார்கள். முதல் நாள் சங்கத் தலைவர் தலைமையில் நற்றிணை, பதிற்றுப்பத்து, கலித்தொகை, பரிபாடல் எனும் நூல்களைப் பற்றி ஆசிரியர் திரு. கு. வி. செல்வத்துரை, பண்டிதர் திரு. க. மயில்வாகனம் என்போர் விரிவுரை நிகழ்த்தினர்.



இரண்டாம் நாள் திரு. கு. பாலசிங்கம் அவர்கள் தலைமையில் குறுந்தொகை, ஐங்குறுநூறு, புறநானூறு, அகநானூறு எனும் நூல்களைப் பற்றி முறையே வித்துவான் திரு. சி. சுப்பிரமணியம், திரு. க. கைலாசபதி, திருவாட்டி ஞானம் இரத்தினம், சங்கத் தலைவர் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் என்போர் சொற்பொழிவாற்றினர்.

## இலக்கிய இலக்கண வகுப்பு

1-10-58 தொடக்கம் புலவர் சிவங் கருணாலய பாண்டியனால் இவ் வகுப்பு நடத்தப்படுகிறது. தொல்காப்பியமுஞ் சிலப்பதிகாரமும் கற்பிக்கப்படுகின்றன.

## தமிழிசை வகுப்பு

14-1-59 தொடக்கம் சங்க ஆட்சிக்குழு உறுப்பினரில் ஒருவரான திரு. நா. ப. பாலசந்திரன் அவர்களால் வாரம் மும்முறை இவ்வகுப்பு நடத்தப்படுகிறது. தமிழிசைப் போட்டி ஒன்றையும் நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்தற்குப் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் (தலைவர்) திரு. வ. யேசுரத்தினம் (பொதுச் செயலாளர்) திரு வே. இராசமாணிக்கம் (பொருளாளர்) திரு. வே. இராசரத்தினம், திரு. நா. ப. பாலசந்திரன், திரு. சி. ச. கனகசிங்கம், என்போரைக் கொண்டதொரு துணைக்குழு நியமிக்கப்பட்டுளது.

## பட்டிமன்றம்

உறுப்பினருக்குப் பேச்சுக் கலையிற் பயிற்சியளிப்பதற்காக இம்மன்றம் தொடக்கப்பட்டுளது. 'பாரதி பழமையின் பாதுகாவலன்', 'மதம் அவசியமா', 'கம்பரும் நாமும்' எனும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இம் மன்ற அமைப்பு விதிகளை ஆக்குதற்கு, திரு. ஆ. தேவராசன் திரு. வி. க. குமாரவேல், திரு. நா. பாலசந்திரன் என்போரைக் கொண்டதொரு துணைக்குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவினர் சமர்ப்பித்த அமைப்பு விதிகளை ஆட்சிமன்றம் ஏற்றுக்கொண்டது.

## தமிழ் நூற்காட்சி

1958இல் வெளியான எல்லாத் தமிழ் நூல்களையும், கிடைத்தற்கரிய தமிழ் நூல்களையும் திரட்டி ஒரு நூற்காட்சியை விரைவில் நடத்துதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்தற்குப் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம், திருவாளர்கள் மு. வயிரவப்பிள்ளை, வே. கணபதிப்பிள்ளை, நா. ப. பாலசந்திரன், சு. த. சம்பந்தர், வி. க. குமாரவேல், ஆ. தேவராசன், மு. கணபதிப்பிள்ளை என்போரைக் கொண்டதொரு துணைக்குழு நியமிக்கப்பட்டுளது.

## ஆண்டுவிழா

ஆண்டு விழாவை இவ்வாண்டு ஆவணித் திங்களில் முத்தமிழ் விழாவாக நடத்துதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

## ஆண்டுமலர்

ஆண்டு மலரை வெளியிடுவதற்கு இரு ஆண்டுகளாக முயன்றும் இதுவரை அதனை வெளியிட முடியவில்லை. எனவே மலரை விரைவில் வெளியிடுதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்தற்கு ஒரு மலர்க் குழுவும் விளம்பரஞ் சேர்க்குங் குழுவும் நிறுவப்பட்டன. மலர்க் குழுவினர் தமது வேலையை முடித்ததும் மலரை அச்சிடுவதற்கு ஓர் ஆசிரியர் குழுவும் நிறுவப்பட்டது. இக் குழுவினர்களுடைய உழைப்பால் மலர் இப்போது அச்சில் இருக்கிறது. "முருகு" எனும் பெயர்கொண்ட அதனை ஆண்டுவிழாவில் வெளியிடலாமென்றெண்ணுகிறோம்.

**மலர்க்குழு** – பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம், திருவாளர்கள் மு. வயிரவப்பிள்ளை, மு. கணபதிப்பிள்ளை, ஆ. தேவராசன், வ. யேசுரத்தினம்.

**விளம்பரக் குழு** – திருவாளர்கள் க. வயிரமுத்து, வே. கணபதிப்பிள்ளை, வே. இராசமாணிக்கம், வே. சுப்பையா.

**மலர் ஆசிரியர் குழு** – பண்டிதர் திரு. கா.பொ. இரத்தினம், திருவாளர்கள் மு. கணபதிப்பிள்ளை, நா. ப. பாலசந்திரன், சி. த. சிவநாயகம், ச. சரவணமுத்து, ஆ. தேவராசன், வ. யேசுரத்தினம்.

## நூல் நிலைய நிதி

சங்க நூல் நிலையத்தைப் பெருப்பித்தற்குப் பணந் தேவைப்பட்டது. இப்பணத்தைச் சேர்த்தற்கு நூல் நிலைய நிதி ஒன்று தொடக்கப்பட்டது. ஒரு ரூபா பெறுமதியான 5000 சீட்டுக்கள் அச்சிடப்பட்டன. இச்சீட்டுக்களை ஆட்சிக்குழு உறுப்பினரே விற்று ஒவ்வொருவரும் குறைந்தது ரூபா 100/- ஆகுதல் சேர்த்து உதவவேண்டுமென ஆட்சிக்குழு முடிவு செய்தது. இன்றுவரை பொருளாளரிடம் கொடுக்கப்பட்ட பணத்தின் விபரத்தைக் கீழே காண்க.

திரு. கா. பொ. இரத்தினம் (தலைவர்) ரூபா 100, திரு. மு. வயிரவப்பிள்ளை ரூபா 100, திரு. உரோசையா ரூபா 100, திரு. வே. கணபதிப்பிள்ளை ரூபா 100, திரு. வே. இராசமாணிக்கம் ரூபா 50, திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை ரூபா 50, திரு. வ. யேசுரத்தினம், ரூபா 50, திரு. மு. கணபதிப்பிள்ளை ரூபா 31, திரு. சோ. சிவசம்பு ரூபா 25, அ. பி. சீமான் ரூபா 25, வீரசோலையப்பன் ரூபா 11. **மொத்தம் ரூபா 642.**

ஆட்சிக்குழுவின் முடிவின்படி ஆட்சிக்குழு உறுப்பினர் ஒவ்வொருவரும் நூறு ரூபாவுக்குக் குறையாமற் சேர்த்து உதவினால் 3000 ரூபாவுக்குறையாத தொகை கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.



## தமிழ் மக்களைப் பாதிக்குஞ் செயல்கள்

இனபேத இன்னலின் கொடிய அதிர்ச்சியால் நம் உறுப்பினர் திகைப்புற்றிருந்த காலத்திலேதான் சங்கத்தின் இவ்வாண்டு தொடங்கிற்று. தமிழ் மக்களைத் துயர்க்கடலிற்றள்ளிய கொலைகளும் கொள்ளைகளும் அவசர நிலைமையும், அதனால் உண்டான அச்சமும் தனித்தமிழ்ப் பகுதிகளுக்கப்பாற்றமிழ்த் தொண்டு செய்யும் ஆர்வத்திற்கே தடைவிதித்தன. இந்த இருள் சூழ்ந்த நிலையிலே தமிழுக்கும் தமிழர்க்கும் மேன்மேலும் தொல்லைகளும் சோதனைகளும் தோன்றின.

மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை மூடும் முயற்சி, மொசுக்கோ வானொலி 'உலகெலாம் வாழுந் தமிழருக்கு' என்று கூறியதைக் கைவிட்டமை, இலங்கை இலக்கிய மன்றத்தில் தமிழருக்குப் போதிய பிரதிநிதித்துவம் கொடாமை, கல்வி அமைச்சின் தமிழ்ப் பண்டிதர்களைப் புறக்கணிக்குங் கொள்கை என்பன குறிப்பிடத்தக்கவை. இவற்றுக்கெல்லாம் எமது சங்கம் தன் எதிர்ப்பைக்காட்டத் தவறவில்லை. இவைபற்றிப் பல தீர்மானங்களை ஆட்சிக்குழு நிறைவேற்றி உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியுளது.

## தமிழில் தந்தி

வெள்ளவத்தை அஞ்சல் அலுவலகத்தில், தமிழிலும் தந்தி அனுப்புதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருமாறு அஞ்சல் தந்தி அமைச்சருக்கு எமது சங்கம் விடுத்த வேண்டுகோள் இன்னும் பலனளிக்கவில்லை, இதனைச் செய்வித்தற்கு வெள்ளவத்தைப் பாராளுமன்ற உறுப்பினரை நாடுவதென ஆட்சிக்குழு முடிவுசெய்துளது.

## நன்றி

சங்கத்தின் ஆக்கத்துக்கு உதவி அளித்துவரும் பத்திரிகைகளுக்கும், வெள்ளவத்தைச் சைவ மங்கையர் கழகத்தாருக்கும், நூல் நிலையத்துக்குப் பணம் நல்கிய பெருமக்களுக்கும், விழாக்களிற் பங்குகொண்ட தமிழறிஞர்களுக்கும், தமிழிலக்கிய விலக்கண வகுப்பையும் தமிழிசை வகுப்பையும் நடத்தும் ஆசிரியர்களுக்கும், சங்கத்தின் நன்றி உரியது.

57 ஆம் ஒழுங்கை,
கொழும்பு-6,
ஆனி ௩௦, தி. ஆ. 1990.

**வ. யேசுரத்தினம்,**
பொதுச் செயலாளர்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## 1—1—58 தொடக்கம் 31—12—58 வரையுமுள்ள வரவு செலவுக் கணக்கு.

| வரவு | ரூ. | ச. | செலவு | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| சாதாரண உறுப்புரிமைப் பணம் | 538 | 50 | சைவ மங்கையர் கழக மண்டப வாடகை | 100 | 00 |
| | | | பகிரங்கக் கூட்டங்களும் விழாக்களும் | 102 | 75 |
| ஆயுள் உறுப்புரிமைப் பணமும் | | | முத்திரை, எழுத்துபகரணம் | 86 | 10 |
| நன்கொடையும் | 755 | 00 | அச்சடித்தல் | 163 | 50 |
| | | | சேகரிப்பாளருக்குரிய கழிவு | 119 | 17 |
| பல்லின வரவு | 10 | 85 | விட்டு வரி | 118 | 05 |
| | | | கணக்குப் பரிசோதகர் கட்டணம் | 50 | 00 |
| வங்கி வட்டி | 149 | 24 | வங்கிக் கட்டணக் கழிவு | | 58 |
| | | | பல்லினச் செலவு | 11 | 30 |
| | | | கட்டடம் பழுது பார்க்க | 249 | 16 |
| | | | மின்சாரம் | 81 | 10 |
| | | | நூல் நிலையமும் வாசக சாலையும் | 212 | 75 |
| | | | கையிருப்பு | 159 | 13 |
| மொத்தம் | 1,453 | 59 | மொத்தம் | 1,453 | 59 |

வே. இராசமாணிக்கம்
பொருளாளர்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## 31—12—58 இல் உள்ள ஐந்தொகை

| செல் பொருள் | ரூ. | ச. | ரூ. | ச. | உரிமைப் பொருள் | ரூ. | ச. | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதல் : | | | | | ஆதனக் கணக்கு : | | | | |
| 1-1-58இல் உள்ள மிகுதி | 31,309 | 81 | | | முந்தின கணக்குத் திரட்டுப்படி | 22,175 | 00 | | |
| | | | | | இரும்புப் படலை | 30 | 00 | 22,205 | 00 |
| இவ்வாண்டில் | | | | | தளபாடங்களும் நிலையாக | | | | |
| செலவு நீக்கி | | | | | நாட்டப்பட்ட சாதனங்களும் : | | | | |
| மிகுதி | 159 | 13 | 31,468 | 94 | முந்திய கணக்குத் திரட்டுப்படி | 392 | 60 | | |
| | | | | | இவ்வாண்டு வாங்கியவை | 155 | 00 | 547 | 60 |
| | | | | | புத்தகங்கள் : | | | | |
| | | | | | முந்திய கணக்குத் திரட்டுப்படி | | | 250 | 00 |
| | | | | | பணம் : | | | | |
| | | | | | கையிருப்பு | 169 | 52 | | |
| | | | | | இலங்கை வங்கியில் : | | | | |
| | | | | | (1) நடைமுறைக் கணக்கு | 664 | 29 | | |
| | | | | | (2) சேமிப்புக் கணக்கு | 7,496 | 64 | | |
| | | | | | அஞ்சல் அலுவலகச் சேமவங்கியில் | 135 | 89 | 8,466 | 34 |
| மொத்தம் | | | 31,468 | 94 | மொத்தம் | | | 31,468 | 94 |

31-12-58 முடிய உள்ள ஐந்தொகைக் கணக்கையும், அதனோடியைந்த கணக்குப் புத்தகங்களையும், பற்றுச் சீட்டுக்களையும், மற்றும் தேவையான விபரங்களையும் ஆதாரமாகப்பெற்றுப் பரிசோதனை செய்து, ஐந்தொகைக் கணக்கு உண்மையானதும் சரியானதுமென உறுதிப்படுத்துகிறேன்.

கொழும்பு 1, 22-6-59.

ஞா. இராசதுரை
பதிவு செய்யப்பட்ட கணக்காய்வாளர்.

வே. இராசமாணிக்கம்
பொருளாளர்.

# கொழும்புத் தமிழ்ச் சங்க அலுவலாளர்கள்

## 13-8-1958 தொடக்கம் 25-7-1959 வரை.

---

காப்பாளர் :

சேர். கந்தையா வைத்தியநாதன்

துணைக் காப்பாளர்கள் :

திரு. க. ச. அருள்நந்தி
,, அ. சபாரத்தினம்
,, யோன் செல்லப்பா
,, இ. பொ. செல்லையா
வணக். எக்ச். எசு. தனிநாயக அடிகள்

திருமதி த நடராசா
திரு. செ. நடராசா
செனேற்றர் சோ. நடேசன்
டக்டர் த. நல்லைநாதன்
திரு. ப. நவரத்தினராசா

தலைவர் :

பண்டிதர். திரு. கா. பொ. இரத்தினம்

துணைத் தலைவர்கள் :

திரு. வ. அருளம்பலம்
,, கோ. ஆழ்வாப்பிள்ளை
,, செ. இராசையா
,, கா. கார்த்திகேசர்
,, வ. குலநாயகம்

திரு. வெ. சுப்பையா
,, சோ. நடராசா
,, க. மதியாபரணம்
,, க. வயிரமுத்து
,, மு. வயிரவப்பிள்ளை

பொதுச் செயலாளர் :

திரு. வ. யேசுரத்தினம்

துணைப் பொதுச் செயலாளர் :

திரு. சு. திருச்செல்வம்

உறுப்புரிமைச் செயலாளர் :

திரு. மு. சிவராசா

பொருளாளர் :

திரு. வே. இராசமாணிக்கம்

துணைப் பொருளாளர் :

திரு. வி. க. குமாரவேல்

நிலைய அமைப்புச் செயலாளர் :

திரு. வே. கனகசபாபதி

நூல் நிலையப் பொறுப்பாளர் :

திரு. மு. கணபதிப்பிள்ளை

ஆட்சிக் குழு உறுப்பினர் :

திரு. பெ. கணபதிப்பிள்ளை
,, அ. வ. இரத்தினராசா 23-2-59 வரை
,, சே. க. சண்முகம்பிள்ளை
,, வே. கணபதிப்பிள்ளை
,, சு. சங்கரசிவம்
,, ஆ. சின்னத்தம்பி
,, சி த. சிவநாயகம்
,, ம. கிருட்டினபிள்ளை

திரு. கு. வி. செல்வத்துரை
,, சி. சேனாதிராசா
,, இ. கி. சோதிநாதன்
,, ஆ. தேவராசா
,, சி. பொன்னம்பலம்
,, சோ. சிவசம்பு
,, சு உ. ரேசையா

திரு. நா. ப. பாலசந்திரன் 24-2-59 தொடக்கம்

கணக்காய்வாளர்கள் :

திரு. இ. சிவரத்தினம்

திரு. க. விசுவநாதன்

---

S. P. LTD.